RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-22283

OPEN ACCESS

# மணிமேகலையில் பெண் அவலங்கள்

**ந. வனிதா [அ, *], ம. நூர்ஜஹான் [அ]**

[அ] தமிழ்த்துறை, பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகலக்கத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி-620023, தமிழ்நாடு, இந்தியா

# Women's woes in Manimekalai

**N. Vanitha [a, *], M. Noorjahan [a]**

[a] Department of Tamil, Periyar Arts & Science College, (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli-620023, Tamil Nadu, India

* Corresponding Author: vanithan24071978@gmail.com

Received: 19-09-2022
Revised: 18-11-2022
Accepted: 13-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Manimekalai is identified as a renaissance epic and an epic that gives rise to women. Even though it is an epic that promotes women, it can be seen from the literary scenes that many tragedies have taken place in the lives of the women of that time. 'A woman is the enemy of a woman', says the feminist proverb. Many of the women's miseries in the twenty-first century are also present in the epic women's lives of the day. It is the need of the hour to make it come out. Inability of women to think for themselves, indecisiveness, inability to move about in public despite being brave, exclusion of women from home due to immorality, exclusion of women from society due to immorality, lack of respect in society for a child born to an illegitimate woman, lack of respect in the society for a child born to an illegitimate woman, man wanting to be ignorant of it even if he is a married woman (desiring his neighbor), drunken criminal punishment given to women, punishments given to women in the constitution, etc. This article with the help of Manimekalai.

**Keywords:** Manimekalai, Woman, Feminist, Married Woman

## முன்னுரை

பெண்களை முன்னிறுத்திய காப்பியங்களில் சிலம்பும், மேகலையும் முன்னோடியினங்கள். இதனை கருக்கொண்டு அம்மாந்தர்களின் பெண்ணியச் சிந்தனைகளைப் பலவாறாக ஆய்ந்துள்ளனர். இருப்பினும் அதில் பொதிந்துள்ள பெண்களுக்கான அவலங்களைத் தனியே பகுத்துக் காண்பது பெண்களின் மதிப்பை மேம்படுத்தும். குறிப்பாகப் புரட்சிக்காப்பியமாகவும் சமயக் காப்பியமாகவும் அடையாளப்படுத்தப்படும் மேகலையில் பெண்கள் அடைந்துள்ள அவலங்களை இனங்காட்டுவது அவர்தம் வரலாற்றிற்குப் பெரிதும் பங்களிப்புச் செய்யும்.

## மணிமேகலை

சிலம்பின் தொடர்ச்சியாகக் கருதப்படும் மணிமேகலை, காப்பியத்தலைவியின் பெயராலேயே சார்த்தி வழங்கப்படுகின்றது. பல சமயக்கருத்துகள் இதனுள்ளிருப்பினும் ஊட்ட வந்த சமயம், பௌத்தம். பெண்ணிற்கு ஏற்றம் கொடுப்பதாகப் பல புரட்சிச் சிந்தனைகளை, அறக் கருத்துகளை, கல்வியை முன்னெடுப்பதாக, சமூகத்தின் அவலங்களான திருட்டு, பொய்யுரை, ஒழுக்கச்சீர்கேடு, பசி, பிணி போன்றவற்றைத் தனியொரு பெண்ணால் சீரமைப்பதாக, பெண்கல்வியை ஆதரித்து அதன்

வயப்பட்ட தலைமைப் பண்பை நிறுவுவதாக, பெண் இல்லறத்தின் வழிப்பட்ட கற்புநிலையில் வழுவிலாதவளாக அமைத்திருக்கின்றது, இக்காப்பியம்.

## பெண்ணியம்

பெண்ணியம் என்பதற்குப் பல வரையறைகள் கூறப்பட்டிருந்தாலும் 'அனைத்து நிலையிலும் பெண்களுக்கான சமஉரிமைகள்' என்பதே பொதுவான கருத்தியலாகும். 'பெண்ணியத்திற்கு உலகிலுள்ள அனைத்துச் சமூகங்களுக்கும் பொருந்தும்படியான, முக்காலத்திற்கும் உரிய ஒரு விளக்கத்தைக் கொடுப்பதென்பது இயலாத ஒன்றாகும். பெண்ணியம் என்பது பெண்களுக்கு மட்டும் சமத்துவம் வேண்டும் என்று கேட்கவில்லை. எல்லா சாராரும் சமத்துவம் பெற்ற சமூகம் உருவாக வேண்டும் என்பதே பெண்ணியத்தின் அணுகுமுறையாகும். அச்சமூகத்தில் ஆணும் பெண்ணும் பாலினப்பாகுகள் இன்றி மனிதர்களாக மதிக்கப்படுதல் வேண்டும் என்பதே அதன் கோரிக்கையாகும்' (Muthuchidambaram, 2005).

## மணிமேகலையில் பெண்நிலைக் கருத்தியல்கள்

மணிமேகலை, சுதமதி, மாதவி, சித்ராபதி, சாலி, ஆதிரை, காயசண்டிகை, மருதி, விசாகை, கோதமை போன்றோர் பெண்மாந்தர்கள் முற்போக்குச் சிந்தனை கொண்டவர்களாக அமைந்துள்ளனர். ஆண் மாந்தர்களுள் ஆபுத்திரன், சாதுவன், உதயகுமாரன் ஆகியோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர். சமூக முன்னேற்றத்திற்கும், பெண் ஏற்றத்திற்கும் பல கருத்துகளைக் கொண்ட போழ்திலும் பெண்ணிய நோக்குடனும் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள அவலங்களை வெளிக்கொணரும் நோக்குடனும் பல கருத்துகளை அணுகவேண்டியுள்ளது.

## பெண் சுயமுடிவின்மை

பெண்கள் தங்கள் வாழ்க்கைக்கான உறுதியான முடிவைத் தானே எடுக்கும் நிலை மணிமேகலையில் அருகியே உள்ளது. சுதமதி, மணிமேகலை, மருதி, காயசண்டிகை, ஆதிரை போன்றோரின் காட்சிகளைச் சான்றாக்கலாம். மணிமேகலை, பல இடங்களில் தன்னிச்சையான முடிவுகளை எடுத்திருப்பினும் பிறரின் கருத்தோடு ஒன்றியே முடிவெடுக்கும் நிலையைக் காணமுடிகின்றது. குறிப்பாகக் காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திரவிழாத் தொடங்கியதும் மாதவி-மணிமேகலையின் நடனம் குறித்த கேள்வியெழுகின்றது. அங்குத் தன்தாய் மாதவியின் முடிவே மணிமேகலையின் முடிவாகவும் எதிர்காலமாகவும் மாற்றப்படுகின்றது.

"மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை

அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்

திருந்தாச் செய்கைத் தீத்தொழில் படாஅள்

ஆங்கனம் அன்றியும் ஆய்இழை கேளாய்

ஈங்குஇம் மாதவர் உறைவிடம் புகுந்தேன்"

மணிமேகலையின் விருப்பம் பெறாமலேயே அவளைப் புத்த மதத்தில் இணைத்துத் துறவியாக்கும் எண்ணம் மாதவியால் ஈடேற்றப்படுகின்றது. உதயகுமாரனின் மேல் காதல்கொள்ளும் மனநிலைக்கு வேலியிடப்படுகின்றது. இருப்பினும் இவள் பிக்குணிக் கோலங்கொண்டதையும் விடுத்து உதயகுமாரன்பால் உள்ளத்தைச் செலுத்துகின்றாள் (Saminathaiyar, 2013).

## பெண்கள் தனியே செல்ல முடியாச் சூழல்

பெண்கள் தன்னந்தனியாக யாதொரு துணையுமின்றி வெளியே செல்லமுடியாத நிலையைக் காப்பியத்துள் பலவிடங்களில் காணமுடிகின்றது. காப்பியத் தொடக்கத்தில் சுதமதியின் வாழ்க்கை முதல் விசாகையின் வாழ்க்கை வரை இதனைக் காணலாம். சுதமதி, சண்பை நகரத்துக் 'கௌசிகன்' என்பாளின் மகள். இவள் துணிச்சல் மிகுந்தவளாதலால் யாதொரு துணையுமில்லாமல் முன்பின் பழக்கமில்லாச் சோலையொன்றில் பூப்பறித்துக் கொண்டிருந்தாள். அவ்வழியே வான்வழியில் இந்திரவிழாவைக் காணவந்த 'மாருதவேகன்' என்ற வித்தைகள் கற்ற ஒருவன் (வித்தியாதரன்) அவளைத் தன்வயமாக்கிச் சிலநாள் கழித்துப் புகார் நகரத்தின்கண் விட்டுச் செல்கின்றான். தன் வாழ்க்கையில் நடந்த தன்அனுபவத்தை எடுத்துக்காட்டி, இதனால் மணிமேகலையும் இத்துன்பத்திற்கு ஆளாக நேரிடும் என்பதை உணர்த்துகின்றாள்.

"பாரோர் காணாப் பலர்தொழு படிமையன்

எடுத்தனன் எற்கொண்டு எழுந்தனன் விசும்பில்

படுத்தனன் ஆங்கவன் பான்மையேன் ஆயினேன்

ஆங்கவன் ஈங்கு எனை அகன்று கண்மாறி

நீங்கினன் தன்பதி நெட்டிடை ஆயினும்

மணிப்பூங்கொம்பர் மணிமேகலை தான்

தனித்து அலர் கொய்யும் தகைமையள் அல்லள்" ஆதலால் அவளைத் தனியே விடுதல் நலம் பயக்காது என்பதை உரைக்கின்றாள் (Saminathaiyar, 2013).

## இல்லம், சமூகத்திலிருந்து புறக்கணிப்பு

சுதமதி அந்தண குலத்தைச் சார்ந்தவள். இவளைக் காணாக் காரணத்தினால் இவளின் தந்தை கௌசிகன் பெரிதும் வருத்தமுற்றுக் கன்னியாகுமரிக்கு நீராடச் செல்வோருடன் இணைந்து பல இடங்களில் தேடுகின்றான். பின் புகார்நகரில் இவளைக் கண்டவுடன் நிலையறிந்து, இவள் இனிமேல் அந்தணர்களோடு இணைந்திருக்கத் தகுதியற்றவள் என்று உணர்கின்றான். மகள்மீதுள்ள பற்றின் காரணமாக யாதொரு தொடர்புமில்லா இப்புகார் நகரத்தில் மனைதோறும் பிச்சையெடுத்துத் தந்தையும், மகளும் உண்டு தனித்திருக்கின்றனர். இந்நிலையில் பசுவொன்று கௌசிகனின் வயிற்றைக் குத்திக் கிழித்துவிட மருத்துவச் சிகிச்சைக்காகவும் உயிரைக் காப்பாற்றும் படியும் பலரை நாடுகின்றாள், சுதமதி.

"சங்கதருமன் தான்எமக்கு அருளிய

எம்கோன் இயல்குணன் ஏதம்இல் குணப்பொருள்

உலக நோன்பின் பலகதி உணர்ந்து

தனக்கென வாழாப் பிறர்க்கு உரியாளன்

இன்பச் செவ்வி மன்பதை எய்த"

அதிலும் முன்னமே தெரிந்திருந்த சமண முனிவரை அழைத்துத் தந்தையின் உடல் துன்பத்தை, உயிருக்கு நேர்ந்துள்ள ஆபத்தைப் போக்குமாறு வேண்டுகின்றாள். ஆனால் அவள் 'மாருதவேகனோடு' சென்றிருந்ததை அறிந்திருந்ததனால் அவனுக்கு உதவ மறுக்கின்றான். பின்னர் முன்பின் அறிந்திரா 'சங்கத் தருமன்' என்னும் பௌத்த துறவியே மருத்துவமளித்து அவனைக் காக்கின்றான் (Saminathaiyar, 2013).

இது, ஒழுக்கச்சீர்கேடு அடைந்த பெண்களை சமூகத்திலிருந்தும், இல்லத்திலிருந்தும் புறக்கணிப்பதையே காட்டுகின்றது. மாருதவேகன் என்னும் கயவனால் சுதமதியின் விருப்பமின்றி

நடந்த தவறான செய்கையால் அவளும் அவள் தந்தையும் தங்களின் இல்லம், சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுகின்றனர். உயிர் பிரியும் நேரத்தில்கூடப் பெண்ணிற்கு நேர்ந்த தவறான ஒழுக்கத்தைக் காரணம் காட்டி ஒதுக்கும் அவலநிலை சுட்டத்தக்கது.

## ஒழுக்கத்தவறால் விளையும் சமூக மதிப்புக்குறைவு

பெண்கள் ஏதேனும் ஒரு காரணம் பற்றிச் சில நேரங்களில் ஒழுக்கத் தவறுகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இத்தவறான கூடுகையினால் அப்பெண்ணும், பிறக்கும் குழந்தையும் உயிரிழப்பு வரையில் செல்வதுண்டு. அவ்விறப்பையும் தாண்டி வளரும் தருணத்தில் இருவருமே சமூகத்தில் பெரும் இன்னலை அடைகின்றனர். கூடுதலாக சமூகத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பும் குறைகின்றது. இதற்குச் சாலி - ஆபுத்திரன் கிளைக்கதை தக்க சான்றாகும்.

'அபஞ்சிகன்' என்னும் அந்தணனின் மனைவி சாலி. இவள் முறைதவறிய ஒழுக்கத்தால் சூல்கொள்கின்றாள். அதையும் பொருட்படுத்தாது, அவ்வொழுக்கக் கேட்டால் விளைந்த பாவத்தைப் போக்கிடத் தென்திசையில் உள்ள குமரிக்கடலில் நீராட வருகின்றாள். வழியிடையே குழந்தையையும் பெற்றெடுக்கிறாள். அதைப் பராமரிக்கவும் முடியாமல், வளர்க்கவும் முடியாமல், குலத்தினருக்காகவும், சமூகத்திற்காகவும் அஞ்சி அருகிலிருக்கும் தோட்டத்தில் இட்டுச் செல்கின்றாள். அக்குழந்தையைப் பசுவொன்று பாதுகாப்பதை அறிந்த 'பூதி' என்னும் அந்தணன் ஆபுத்திரன் எனப்பெயரிட்டு வளர்க்கின்றான்.

முறைதவறிய ஒழுக்கத்தால் பிறப்பினும் உயர்சிந்தனைகளோடு ஆபுத்திரன் காணப்படுகின்றான். அவ்வூரின் அந்தணர் வீடொன்றில் பசுவை வேள்வியிலிடுவதை அறிந்து பிறரறியா வண்ணம் இரவோடு இரவாக அப்பசுவை மீட்கிறான். இச்செய்தியறிந்த அந்தணர் குழாம் அவனைப் பின்தொடர்ந்து தாக்குகின்றனர். பின்னடக்கும் உரையாடலில் இருதரப்பினருக்கும் இடையே கருத்துமோதல் நிகழ்கின்றது. ஆபுத்திரனோ, 'தானாக வளர்ந்த புல்லை மேய்ந்து தனக்கும் பிறர்க்கும் பால்கொடுத்து உயிர்காக்கின்ற இப்பசு யாதொரு குற்றமுமில்லாதது, பால் தருவதைத் தவிர வேறொரு குற்றமும், தீங்கும் விளைவிக்கா இப்பசுவை வேள்வித்தீயில் தள்ளுவது முறையன்று' என உயிர்க்கொலை குறித்து இரக்கப்படுகின்றான். ஆனால் எதிர்த்தரப்பின் வாயிலாக இவனின் பிறப்பும், குடிவழியும் கேலி செய்யப்படுகின்றது.

"அருமறை நல்நூல் அறியாது இகழ்ந்தனை

தெருமரல் உள்ளத்துச் சிறியை நீஅவ்

ஆமகன் ஆதற்கு ஒத்தனை அறியாய்

நீமகன் அல்லாய் கேள்என இகழ்தலும்"

"சொல்லுதல் தேற்றேன் சொல்பயம் இன்மையின்

புல்லல் ஓம்பன்மின் புலைமகன் இவன்என

ஆபுத்திரன் பின்பு அமர்நகை செய்து

மாமறை மாக்கள் வரும்குலம் கேண்மோ"

ஆபுத்திரன் பிறந்தவுடன் தன் தாயால் தனித்து விடப்பட்டவன். பின் 'ஆ'வால் வளர்க்கப்பட்டவன். ஆதலால் ஆமகன், சிறியவன், புலையன் (தீங்குடைய, அசுத்தமானவன்), சிறியவன் என இகழப்படுகின்றான். பிறப்பில் அந்தணனாகவும், வளர்ப்பில் அந்தணனாகவும் இருந்த போழ்திலும் தொடுதலில் இருந்தும் விலக்கப்படுகின்றான் (Saminathaiyar, 2013).

பிற உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது என்ற உயரிய சிந்தனை கொண்டிருந்தாலும், அவனின் பிறப்பைக் காரணங்காட்டிச் சமூகத்திலிருந்து ஒதுக்கும்நிலைக்குத் தள்ளப்படுகின்றான். பின்னாளில் தன் குலத்திலிருந்தே புறக்கணிக்கப்படுகின்றான்.

## பிறன்மனை நோக்கும் அவலங்கள் I - மருதி

மணிமேகலையில் வரும் பல்கிளைக்கதைகளுள் மருதியின் வாழ்க்கையும் ஒன்று. இவள் மணமான அந்தணப்பெண். காவிரிப் பூம்பட்டினத்தை முன்பு ஆண்டுவந்த 'ககந்தன்'. காவிரியாற்றில் நீராடிய பின்னர்த் யாவருமின்றித் தனித்து நடந்து வந்த மருதியைக் கண்டு ககந்தனின் இளைய மகன் இச்சை கொள்கிறான். ஆகையினால், 'நீ வா' என்று உடற்சேர்க்கைக்கு அழைக்கின்றான். மணமான அந்தணப் பெண் என்று தெரிந்திருந்தும் பிறன்மனை விழைகிறான். இதனைக் கண்டு மனம் பொறாதவளாய், பத்தினிப் பெண்களாய் இருப்பவர்கள் எவ்வாறு அடுத்தவர் இதயத்தில் இடம்பெற முடியுமென்று ஆற்றாளாய்ச் சதுக்கப்பூதத்திடம் வேண்டுகின்றாள்.

"மன்முறை எழுநாள் வைத்து அவன் வழூஉம்

பின்முறை அல்லது என்முறை இல்லை

ஈங்கு எழுநாளில் இளங்கொடி நின்பால்

வாங்கா நெஞ்சின் மயரியை வாளால்

ககந்தன் கேட்டு கடிதலும் உண்டுஎன

இகந்த பூதமெடுத்து உரைசெய்ததுஅப்

பூதம்உரைத்த நாளால் ஆங்குஅவன்

தாதை வாளால் தடியவும் பட்டனன்"

குற்றம் செய்தோரை ஏழுநாள்களுக்குள் தண்டிக்கப்பட வேண்டுமென்பது அரசநியதி. அவ்வாறு செய்யாவிடின் அவனை நான் தண்டிப்பேனென சதுக்கப்பூதம் உரைத்திட அவனோ ஏழுநாளுக்குள்ளாகத் தன் தந்தையின் (ககந்தன்) வாளாவே வீழ்த்தப்படுகின்றான் (Saminathaiyar, 2013).

## பிறன்மனை நோக்கும் அவலங்கள் II - விசாகை

புகார்நகரில் முன்னர் வாழ்ந்த வணிகருள் ஒருவன் தருமதத்தன். மாமன் மகள் விசாகை. இருவரும் ஒருவர்மீது ஒருவர் அன்பு பாராட்டிப் பேசிக்கொண்டிருந்த வேளையில் காந்தர்வ மணத்திற்குரியவர்கள் என்று ஊர் முழுக்க அலர் கிளம்புகின்றது. இதனைக்கண்டு வெகுண்ட விசாகை, உலகறவியின் கந்திற்பாவையை உண்மைக்குத் துணைபுரிய வேண்டுகிறாள். அத்தெய்வமும் 'இவர்களிருவரும் இப்பிறவியில் மணம் முடிக்காது மறுபிறப்பில்தான் மணப்பர்' என உண்மை தெரிவிக்கின்றது.

இவ்வாறு ஊரார் ஏற்படுத்திய பழியைத் தெய்வத்தின் துணைகொண்டு நீக்கி வீதியின் நடுவே பலரிருக்க வருகையில், அந்நகரத்தை ஆண்டுகொண்டிருந்த ககந்தனின் மூத்தமகன் (இவனின் இளைய மகனே முன்பு மருதியின்மீது இச்சை கொண்டதற்காக வெட்டி வீழ்த்தப்பட்டவன். காண்க: பிறன்மனை நோக்கும் அவலங்கள் I - மருதி) இவளுடைய அழகைக் கண்டு காதல் வயப்படுகின்றான். ஆகையினால்,

"எல்அவிழ் தாரோன் இடுவான் வேண்டி

மாலை வாங்க ஏறிய செங்கை

நீலக்குஞ்சி நீங்காது ஆகலின்

"ஏறிய செங்கை இழிந்திலது இந்தக்

காரிகை பொருட்டு" எனக்ககந்தன் கேட்டுக்

கடுஞ்சினம் திருகி மகன்துயர் நோக்கான்

மைந்தன் தன்னை வாளால் எறிந்தனன்" (Saminathaiyar, 2013)

வீதியில் பலரும் சூழ்ந்திருக்க, விசாகையை மணக்க எண்ணித் தன் தலையில் அணிந்திருந்த மாலையை அவள் கழுத்திலிடுவதற்காகத் தன் கைகளினால் தலையைத் தொட அக்கை அவன் தலையிலிருந்து பிரியாமல் தலையிலேயே பிணிக்கப்படுகிறது. விசாகையின் ஒழுக்கநெறியையும், தன் மூத்தமகன் பிறன்மனை விழையும் தன்மையையும் கண்டு ககந்தன் தன் வாளால் மகனென்றும் பாராமல் வீழ்த்துகின்றான்.

மேல்வந்த மருதி, விசாகை இருவரின் நிகழ்வும் மணமான இரு பெண்டிரை முன்னிறுத்தியதாக அமைகின்றது. ககந்தன் எனும் அரசகுடும்பத்தின் இரு மகன்களும் பிறன்மனைவிழையும் தீச்செயல்களில் ஈடுபடுவதும், பின்பு தந்தையாலேயே தண்டித்து உயிர் நீக்கப்படுவதும் தகுந்த செயலாகக் கொள்ளலாம். ஆனால் மனம் நொந்து அவலத்திற்குண்டானது கற்புடை பெண்டிரே.

## பெண்களுக்கான குடிகுற்றத் தண்டனை

முடியாட்சியிலும் தனிமனித ஒழுக்கம், தனிமனித அறம், தனிமனித-சமூக ஒத்திசைவு போன்றவை பெரிதும் விரும்பப்பட்டன. தொழில் வழிப்பட்ட குலங்கள் நடைமுறையிலிருந்தன. மணிமேகலை வளர்ப்பால் புத்த துறவியானாலும் பிறப்பால் நாடகக் கணிகைக் குலம். மணிமேகலையின் தாயார் மாதவியும், பாட்டி சித்ராபதியும் கணிகைக் குடிவழியே. மாதவி, 'மாபெரும் பத்தினிமகள் மணிமேகலை தவவழியில் மட்டுமே செல்வாள், இழிந்த பரத்தமை வழியில் செல்லாள்' என்று தவநெறி ஆற்றுப்படுத்துகின்றாள். ஆனால் சித்ராபதியோ, 'மணிமேகலையின் தவவேடம் நகைப்பிற்குண்டானது, குலத்திற்கு இழிவானது' என்று எடுத்துரைக்கின்றாள். 'நாடகக் கணிகையர்க்குத் துறவறம் ஏற்புடையதன்று' என்றும், 'குலவழக்கிற்கு ஒத்ததன்று, மாறானது' என்றும் தன் பக்கத்து நியாயங்களை விளக்குகின்றாள்.

"முளிஎரிப் புகூஉம் முதுகுடிப் பிறந்த
பத்தினிப் பெண்டிர் அல்லேம் பலர்தம்
கைத்தூண் வாழ்க்கைக் கடவியம் அன்றே
பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மைஇல்
யாழ்இனம் போலும் இயல்பினம் அன்றியும்
நறுந்தாது உண்டு நயன்இல் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்"

எனத் 'தன் குலத்திற்குண்டான இயல்புகளை எடுத்துரைத்து மணிமேகலையை அதன்படி மாற்றுவேன். அவ்வாறு சொல்லியபடிச் செய்யவில்லையாயின் குடிக்குற்றப்பட்டு, நாடகக் கணிகையர் வீட்டிற்குச் செல்லாமல் முடங்குவேன்' எனச் சூளுரைக்கின்றாள் (Saminathaiyar, 2013).

"பொன்தேர்க் கொண்டு போதேன் ஆகின்
சுடுமண் ஏற்றி அரங்கு சூழ்போகி
வடுவொடு வாழும் மடந்தையர் தம்மோர்
அனையேன் ஆகி அரங்கக் கூத்தியர்
மனைஅகம் புகாஅ மரபினன்' என்றே
வஞ்சினம் சாற்றி நெஞ்சு புகையுயிர்த்து"

குறிப்பிட்ட குடியில் இருக்கும் ஒருவரால் அக்குடிக்கு இழுக்கு நேர்ந்துவிட்டால் அல்லது கூறியதைக் கூறியவாறு நடத்திக்காட்ட முடியா வண்ணம் பொய்த்துப் போனால், அதன் வாயிலாகக் குடிக்கு இழுக்கு நேர்ந்தால் 'குடிக்குக் குற்றம்' என்றுரைத்தல் மரபு. அவ்வாறு குடிக்குக் (இங்கு நாடகக் கணிகையர் குடிக்கு) குற்றம் நேர்ந்தால் 'ஏழு செங்கல்லைத் தலைமேல் சுமந்து நாடக அரங்கைச் சுற்றி

வரவேண்டும்; வந்த பின் அவர்கள் நாடகக் கணிகையர்களின் வீடுகளுக்கோ, நாடக அரங்கிற்கோ செல்லக்கூடாது. பழியை மட்டும் சுமந்துகொண்டு அவர்கள் தனித்திருக்க வேண்டும். பிறரால் புழங்கப்படாமல் தனித்து விடப்படுவர். அத்தகைய தண்டனையைச் சித்ராபதி தனக்குத்தானே விதித்துக்கொள்வதாகக் காப்பியத்தில் இடம்பெறுகின்றது (Saminathaiyar, 2013).

இச்செயல்களினால் அவ்நாடகக் கணிகையர் தொழில்முறையிலும், குலமுறையிலும் தனித்து விடப்படுவதால் அவர்களின் உணவு ஆதாரங்கள் கேள்விக்குறியாகும். உடல் நல்லநிலையில் இருந்தாலும் இரந்து பிச்சையேற்றுண்ணும் நிலைக்குத் தள்ளப்படுவர். மேலோட்டமான கண்ணோட்டத்தில் பார்த்தால் எளிமையான தண்டனை போன்று தோன்றினாலும் சமூகத்தின் பொதுவெளிக்குத் தள்ளப்படும்போது அவள் விருப்பப்பட்டோ, விருப்பப்படாமலோ பாலியல் தொழிலாளியாக மாறுகின்றாள் அல்லது மாற்றப்படுகின்றாள்.

## அரசமைப்பில் பெண் தண்டனைகள்

நிலையான, எழுத்தப்படாத சட்டங்கள் பல நிறைந்ததே மன்னராட்சி அமைப்பு. மணிமேகலையும் அக்கால வழக்கியலையும், வாழ்வியலையும் எதிரொலிக்கின்றது. அவளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளும் அத்தகையதே. காயசண்டிகையைப் பின் தொடர்கிறான் எனத் தவறுதலாக எண்ணி அவளின் கணவன் காஞ்சனன், பின் தொடர்ந்த மணிமேகலையின் காதலன் உதயகுமாரனைக் கொலைசெய்கிறான். அரசனோ காஞ்சனன் குற்றமற்றவன் என்றும், இவ்வாறு கொலைநிகழ முதன்மைக் காரணியான மணிமேகலையைச் சிறைப்படுத்த வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்குகின்றது. ஆனால் அரசியோ, அரசனிடம் முறையிட்டுச் சிறை, மணிமேகலைக்குத் தகுதியானது இல்லை என வாதிட்டு விடுவிக்கின்றாள். ஆனால் உண்மையில் அவளின் வஞ்சக எண்ணம் பொதுவெளி மக்களால் அடித்துத் துன்புறுத்தி உயிர்போகச் செய்வதேயாகும்.

- ஊரார் அடித்துக் கொள்ளும்படிப் பித்துடையவள் ஆக்குதல்
- மணிமேகலை என்ன விரும்பினால் என அறிவிலியால் கூற வைத்தல்
- போலி நோயைக் காரணம் காட்டி உணவிடாமல் இறக்கச் செய்தல்

இம்மூன்று தண்டனைகளுமே ஒரு பெண்ணால் ஒரு பெண் துறவிக்கு வழங்கப்பட்டது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

“பித்துடையவள் ஆக்குதல்

அங்கு அவள் தனைக் கூஉய் அவள் தன்னோடு

கொங்கு அவிழ் குழலாள் கோயிலுள் புக்கு ஆங்கு

'அறிவு திரித்து இவ் அகல் நகர் எல்லாம்

எறிதரு கோலம் யான் செய்குவல்' என்றே

மயல் பகை ஊட்ட மறு பிறப்பு உணர்ந்தாள்

அயர்ப்பது செய்யா அறிவினள் ஆகக்”

என்று, மணிமேகலைக்கு மயக்கும் மருந்தைக் கொடுத்து அவளுடைய அறிவைப் பித்துடையவளாக்க முனைகிறாள், அரசமாதேவி. காரணம், (பித்தர்களை தெருவின் நடுவே நிற்கவைத்துக் கல்லால் அடித்தும், பரிகாசம் செய்து நகைப்பதும், வீண் வம்பிற்கு இழுப்பதும் அந்நாள் வழக்கம்.) இவ்வூரில் இருப்போர் அனைவரும் மணிமேகலையைப் ‘பித்துடையவள் என்றுரைத்து அடித்துத் துன்புறுத்தவேண்டும் என்பதுவே. ஆனால் அவளோ மறுபிறப்பு உணர்ந்திருந்த காரணத்தினால் அறிவு வேறுபாடின்றி நடுவுநிலை திரியாமல் நின்றாள் (Saminathaiyar, 2013).

## அறிவிலியால் மானக்கேடு கொள்ளச்செய்தல்

மேற்கண்ட மருந்து முறைகளினால் மணிமேகலையை யாதொன்றும் செய்யமுடியாக் காரணத்தால் மனிதர்களின் உதவியை நாடுகின்றாள், இராசமாதேவி. ஆகையினால் மணிமேகலையின் பிக்குணித் தோற்றத்தை வேறுபடுத்தி அழகுடையவளாக்கி, 'மணிமேகலை என்னை விரும்பினாள்' என அறிவிலி ஒருவனைக் கூறச் செய்கின்றாள். அறிவிலிக்குப் பொற்காசுகள் நிரம்பக் கொடுத்து அவளைத் தன்சொற்படி நடக்கவைக்கின்றாள். அவனோ பலரிடமும் மணிமேகலை என்னை மயக்கினள் என்றுரைத்து அந்தப்புரத்தில் தனியே விடப்பட்டிருக்கும் மணிமேகலையைக் காணச்செல்கின்றான்.

"ஆங்கவன் சென்று அவ்ஆய் இழைஇருந்த

பாங்கில் ஒரு சிறைப்பாடு சென்று அணைதலும்

'தேவிவஞ்சம் இதுஎனத் தெளிந்து

நாஇயல் மந்திரம் நடுங்காது ஓதி

ஆண்மைக் கோலத்து ஆய்இழை இருப்ப

காணம் பெற்றோன் கடுந்துயர் எய்தி

'அரசர் உரிமைஇல் ஆடவர் அணுகார்

நிரயக் கொடுமகள் நினைப்பு அறியேன்' என்று

அகநகர் கைவிட்டு ஆங்கவன் போயபின்"

ஆனால் மேகலையோ அரசதேவியின் செயலுணர்ந்து ஆடவர் உருக்கொண்டு நுழைகின்றாள். அறிவிலி பயந்தோடி நகர் நீங்குகின்றான். பெண் துறவி ஒருத்தித் தன்னை மயக்கினள் என்று ஊரார் பலரிடமும் உரைக்கவைத்துப் பொதுவெளியில் மானக்குறைபாடு ஏற்படுத்தப்படுகின்றது (Saminathaiyar, 2013).

## பொய்நோய் கூறல் - பட்டினியிடல்

காப்பியம் முழுக்க அறத்தின் வடிவமாகவும், பிறருக்குப் பசி என்னும் நோயைப் போக்கிய அருமருந்தாகவும் திகழ்ந்தவள், மணிமேகலை. 'யானைத்தீ' எனும் பெரும்பசி நோய்க்கு ஆட்பட்டவரையும், பல்வகை மனிதர்களின் பசியையும் போக்கியவள். ஆனால் இறுதியில் அவளும் 'பசி' நோயின் கொடிய தன்மைக்கு ஆட்படுத்தப்படுகின்றாள். முதலில் மணிமேகலையை இழிவாக்கிட மருந்து உத்தியையும், பின் 'அறிவிலி மனிதன்' உத்தியையும் பயன்படுத்திட்ட அரசி, இறுதியாக அவளின் உயிர்பறிக்கத் துணிகிறாள்.

"மகனை நோய் செய்தாளை வைப்பது என்என்று

'உய்யா நோயின் ஊண் ஒழிந்தனள்என

பொய்ந்நோய் காட்டிப் புழுக்கறை அடைப்ப

ஊண்ஒழி மந்திரம் உடைமையின் அந்த

வாள்நுதல் மேனி வருந்தாது இருப்ப"

'நோய் மிகுதியின் காரணமாக இவளுக்கு உணவு வயிற்றுக்குள் செல்லவில்லை' என அரசமாதேவி போலியான பொய்ந்நோயைக் காரணம் காட்டுகின்றாள். ஆகையால் அவளுக்கு உணவளிக்காமல் தனியறையில் அடைக்கின்றாள். அவளோ ஊண்தவிர்க்கும் மந்திரத்தை உரைத்து உயிர்காத்திருக்கின்றாள். எவ்வகையிலும் மணிமேகலையை வெல்லமுடியாததால் அவளின் மேன்மைகளை எண்ணி அரசமாதேவி மனம் மாறுகின்றாள் (Saminathaiyar, 2013).

இங்கு அரச தண்டனையாகக் கொடுக்கப்பட்டவை அனைத்தும் பெண் துறவிக்கு நேர்ந்த இன்னல்கள் தாம் என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும். கல்வியிலும், சமய தருக்கங்களிலும், சமூக மதிப்பிலும் உயர்ந்து விளங்கக் கூடியவர்களுக்கே இத்தகைய இன்னல்கள் நடைபெற்றபோது, சமூகத்தின் விளிம்பில் இருக்கும் பெண்களுக்கு நடந்திருக்கும் அவலங்கள் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. மணிமேகலையின் வாயிலாகக் காணக்கிடைக்கும் பெண் அவலங்கள் அனைத்தும் அக்கால மகளிரின் வாழ்வியலை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

## முடிவுரை

காப்பியமைப்பில் பல பெண்மாந்தர்கள் வந்தாலும்கூடப் பெண்நிலைக் கருத்தியல்களை வெளிப்படுத்துவதில் மணிமேகலை, சுதமதி, சாலி, ஆபுத்திரன், மருதி, விசாகை ஆகியோர் குறிப்பிடத்தக்கார். தனக்கான வாழ்க்கையை, விருப்புவெறுப்புகளைத் தானே அறுதியிட முடியாப் பெண்ணாக மணிமேகலை காட்சிப்படுகின்றாள். தன் தாயின் முடிவையே பின்பற்றுகின்றாள். மனம் உதயகுமாரன் மேல்சென்றாலும் தன் புற வாழ்வியல் இடங்கொடுக்காது என உள்ளப்பிதற்றல் கொண்டவளாகத் தொடக்கத்தில் காணப்படுகின்றாள். ஆடவர்கள் பெண்கள்பால் உடல் விருப்புக்கொண்டு செய்யும் செயலும், பெண்களுக்குச் சூழல் காரணமாக நேரும் ஒழுக்கக்கேடும் சமூகத்தில் கடியப்பட்ட ஒழுக்கங்களாகத் திகழ்கின்றன. பொதுவெளியில் பெண்கள் தனித்து நடமாட முடியாது என்பதைச் சுதமதி, மருதி, விசாகை போன்றோருக்கு நேர்ந்த அவலங்கள் கொண்டு துணியமுடிகின்றது. இஃது இன்றுவரையில் இருபத்தியோராம் நூற்றாண்டிலும் வேறுஏதேனும் ஒருவழியில் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றது. பெண்களுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இதுபோன்ற இன்னல்களினால் அப்பெண்கள், குடும்ப உறுப்பினர்கள் பாதிப்படைவதுடன் சமூத்திலிருந்தும் ஒதுக்கிவைக்கப்படுவதைச் சுதமதியின் வாழ்க்கைவழி அறியமுடிகின்றது. பெண்கள் மீதுகொண்டிருக்கும் உடல் இச்சையால் பிறன்மனை நோக்கி அப்பெண்ணிற்கும், சமுதாயத்திற்கும் ஊறுசெய்வோர்க்குத் தக்க தண்டனைகள் தேவை என்பதை அறியலாம். ‘பெண்ணே பெண்ணுக்கு முதல் எதிரி’ என்பது பெண்ணியப் பழமொழி. அதற்குச் சான்றுபகரும் வண்ணம் சித்ராபதி, அரசமாதேவியின் பெண் அவலச் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

## References

Muthuchidambaram, S. (2005) Penniyathin Thotramum Valarchiyum, Muthu Pathippagam, Thirunelveli, India

Saminathaiyar, U.Ve.Sa, (2013) Manimekalai, Saminathaiyar Nool Nilayam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License